சிறப்பிதழ்
Special Issue

3-4 பங்குனி 2052
16th - 17th March 2021

ISSN : 2321 - 984X

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)*

*Journal of*
# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*
Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி [தன்னாட்சி] எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி [மகளிர்] வீராச்சிபாளையம், சங்ககிரி

## தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

**முனைவர் ம. கவிதா**
**முனைவர் செ. ஜெயந்தி**

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

19 பகுதி-3
Part -3

Scanned by TapScanner

# முத்துலட்சுமி ராகவன் நாவல்களில் கணவன் மனைவி உறவுநிலை

செ. ரேவதி
பகுதி நேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வுத்துறை,
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.

இந்தியாவில் பல்வேறு சிக்கல்களுக்கிடையேயும் குடும்பம் என்ற அமைப்பானது தொடர்ந்து இயங்கி வருகிறது. அதே வேளையில் ஏற்கனவே உருவாக்கப்பட்டு காலங்காலமாக இயங்கி வரும் குடும்ப அமைப்புகள் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

திருமணங்கள் மூலம் புதிய குடும்பங்கள் உருவாகி வருகின்றன. குடும்பம் பற்றிக் குறிப்பிடும்பொழுது பலவிதமான கருத்துக்கள் நிலவி வருகின்றன. சமுதாயத்தில் மிகப் பழமையான நிறுவனம் குடும்பம் ஆகும். பிறப்பு முதல் இறப்பு வரை குடும்பத்துடன்தான் மக்கள் தொடர்ச்சியாகத் தொடர்பு கொள்கின்றனர். அதனால் மக்களின் வாழ்வியல் சார்ந்த அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்கிறது. அதனால் குடும்பம் என்ற அமைப்பு காலம், இடம் என அனைத்தையும் கடந்து எல்லா பண்பாடுகளுக்கும் ஒரு பொதுவான பண்பாகத் திகழ்கிறது.

## குடும்பம் - சில பொது வரையறைகள்

குடும்பம் என்பதற்குப் பல்வேறு வரையறைகள் ஆய்வாளர்களால் சுட்டிக் காட்டப்படுகிறது. "குடும்பம் பல்வேறு நெறிகள், வழக்குகள், வழக்கடிப்பாடுகள் ஆகியவற்றைக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் பல்வேறு செயற்பாடுகளால் விரிவடைந்து பல்வேறு பொறுப்புகளைப் பணிகளைக் கொண்டதாகவும் விளங்குகின்றது. குடும்பம் அவற்றையெல்லாம் ஒரு கட்டுக்குள் கொண்டு இயங்குவதால் அஃதொரு நிறுவனமாகக் கருதப்படுகிறது."[1] என்றும், குடும்பம் மனித வாழ்க்கையில் அனைவரும் பெற வேண்டிய ஒரு அமைப்பாகும். அதைப் பெறாத போது வாழ்க்கை பயனற்றுப் போகிறது எனலாம்.

"மானிட சமுதாயம் தோன்றிய நாள் முதற்றே குடும்பம் என்னும் அமைப்பு நிலவி வருகிறது. சமுதாயமானது குழுக்களின் பிணைப்பால் இணைந்திருப்பினும், மனித நிறுவனங்களில் குடும்பமே சிறந்த நிறுவனமாக மனித வாழ்வின் அடிப்படை அலகாகக் கருதப்படுகிறது."[2] இவ்வாறு மனித சமுதாயத்தின் தலையாய நிறுவனமாக அமைவது குடும்பமே ஆகும்.

குடும்பம் என்பது அவரவர் அவரவர் வாழ்வியல் சூழலுக்கு ஏற்ப அமையும் என்பர். இதனை, "குடும்பச் சிக்கல் என்பது எல்லோருக்கும் பொதுவான தன்மைகளைப் பெற்றிருப்பதில்லை. அஃது அவரவர் வாழ்வில் மூழ்நிலைக்கேற்பவே அமையும். ஒரு சாராரிடம் பண்பாட்டுச் சார்புடைய சிக்கல்களையும் ஒரு சாராரிடம் வறுமை, பொருளாதாரத் தேவை ஆகியனவும் குடும்ப அமைப்பிற்குள் சிக்கல் மையங்களாக இருந்து வருகின்றன."[3] என்று குணசேகரன் அவர்கள் கூறுவது இங்குக் கருதத்தக்கதாகும்.

## குடும்பம் - விளக்கம்

கணவன், மனைவி, குழந்தைகள், உறவினர் என அனைவரும் கூடி வாழும் ஒரு சமூக அமைப்பு வாழ்க்கையே குடும்ப அமைப்பு என்கிறோம். சமூகவியலாளர் மனிதகுலத்தின் அடிப்படை அலகு குடும்பம் என்பர். இலக்கியங்களில் குடி, மனை, அறம், குடிமை, இல் என்ற சொற்கள் குடும்பத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மனைவி மக்களோடு வாழும் இல்லறமே நல்லறமாகும். பிறர் பழித்துப் பேசாத அளவுக்கு அவர்களை அரவணைத்துச் செல்வதே குடும்பக் கடமைகளில் ஒன்றாகும். இதனை,



Scanned by TapScanner

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று"
(திருக்குறள் 49)

என்ற குறள் வழி அறியலாம். மேலும்

குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல உயர்ந்து"
(திருக்குறள் 957)

என்ற குறள் மூலமும் அறிய முடிகிறது.

குடும்பம் என்பது தந்தை தலைவனாகப் பொறுப்பேற்று வழிநடத்திச் செல்வதாகும். இதனை,

"பெருமையும் உரனும் ஆடுஉ மேன"
(தொல்.களவு.நூற்பா-1044)

என்ற அடிகள் மூலம் அறியலாம். இதில் ஆண் தலைமைப் பொறுப்பு ஏற்றதால் பெண் அச்சமும் நாணமும் நிரம்பியவளாகக் காணப்பட்டாள். அத்தகைய குடும்பத்தில் உள்ள பலவேறு உறவுகளான கணவன்- மனைவி உறவு, தாய்-மகள் உறவு, தாய் - மகள் உறவு, தந்தை - மகன் உறவு, தந்தை - மகள் உறவு, அக்கா- தங்கை உறவு, அண்ணன்-தங்கை உறவு, தாத்தா-பேரன் உறவு போன்ற உறவுநிலைகள் அமைந்துள்ள விதம் பற்றி இவ்வியலில் ஆராயப்படுகிறது.

### கணவன் - மனைவி உறவுமுறை

குடும்பமானது திருமணத்தின் மூலம் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே நிலையானதொரு நெருக்கமான பிணைப்பை உண்டாக்குகிறது. அது அவர்களுடைய உறவுகளை ஒரு குறிப்பிட்ட வழியில் ஒழுங்குபடுத்துகிறது. அந்தப் பிணைப்பு இருவருக்குமிடையே ஒருவித ஈடுபாட்டையும் கவர்ச்சியையும் பொதுநல உணர்வையும் கணவன் மனைவி என்ற இரத்த உறவையுமே முதன்மையாகக் கொள்கின்றது. இதனை, "ஓர் ஆடவனும் ஒரு பெண்ணும் மணவாழ்க்கை மூலம் பெறப்படும் சமூக அந்தஸ்தான கணவன், மனைவி உறவு முறை ஒரு குடும்பம் என்று அடையாளம் காட்ட அடிப்படையாய் அமைகிறது."[4] என்ற கூற்று கணவன் மனைவி உறவை அடையாளப்படுத்துகிறது.

குடும்பம் நடத்துவதற்கு இருவரும் சரிபாதியாக குடும்பப் பொறுப்பில் பங்கெடுத்து அனுசரித்தால் அன்பும் பாசமும் கொண்டு வாழலாம். பெண் ஆணுக்கு சந்தனம் போன்றவள். அவள் அவனுக்கு மணம் தருகிறாள். திருமணம் என்ற பந்தத்தின் மூலம் வாழ்வை மணம்பெறச் செய்கிறாள். பெண் ஆணுக்கு முத்தைப் போன்றவள். அவள் அழகைத் தருகிறாள். பெண் இசையைப் போன்றவள் இன்பமாகிய புத்துணர்வினைத் நல்குகிறாள். இப்படி அனைத்து இன்பங்களையும் கொடுப்பவள் பெண்.
கணவன் மனைவி உறவில் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு வாழும்போது அங்கு சிக்கல்கள் ஏற்படுவதில்லையென்பதை, "கணவன் மனைவி உறவு என்பது மனம் ஒன்றாக அன்பில் திளைத்து ஒன்று மற்றொன்றிற்காக வாழும் அன்றில் தத்துவமாக இலங்கவேண்டும்."[5] என்று ஜெயகாந்தன் கூறுகிறார்.

### மனம் விட்டுப் பேசுதல்

கணவன் மனைவியிடம் மனம் விட்டுப் பேசுவதால் ஒருவரின் உணர்வை மற்றவர் புரிந்துகொண்டு ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போவதால் குடும்ப வாழ்வில் பலவித சிக்கல்கள் வராமல் தவிர்க்க இயலும். மழைச்சாரலாய் மனம் நனைத்தாய் எனும் நாவலில் தன் மகளைக் காதலித்த இளைஞன் பெண்கேட்டு வந்தபோது கால்மேல் கால்போட்டு உடகார்ந்திருக்கிறான். இதனைக் கண்ட கணவனும் மனைவியும் தவறாக எடுத்துக் கொள்ளாமல் மனம் விட்டுப் பேசுகின்றனர். இதனை, "இந்தப் பையனிடம் ஒரு நிமிர்வு தெரியுது வள்ளி. உட்காரும்போதே கால் மேல் கால் போட்டுக்கிறான்."[6] என்ற கூற்றின் மூலம் அறியலாம்.



Scanned by TapScanner

தன் மகள் புகுந்த வீட்டில் மகிழ்ச்சியாக இருப்பாளா என்று மனம் வருந்திய நிலையில் இருக்கும் கணவனுக்கு மனைவி ஆறுதலாக இருப்பதை

"பயமா இருக்கு யமுனா... என்னை நினைத்துக்கிட்டு என் மகளை இன்னும் என்னவெல்லாம் கொடுமை செய்வாரோன்னு பயமாய் இருக்கு...

ஊஹூம் ...? அவ்வளவு பயப்படுகிறவர் ... மணமேடையில் மாலையும் கழுத்துமாக இருக்கிற பெண்ணை எழுந்து வான்னு சொல்லியிருக்கக் கூடாது...

நான் என்னடி செய்ய..? அவர் என் தங்கையின் மகன்.."[7] என்ற கூற்றில் கணவனும் மனைவியும் மனம் விட்டுப் பேசி ஒருவருக்கொருவர் ஆறுதலாக இருப்பதை அறியமுடிகிறது.

மனைவி கருவற்றிருக்கும் காலத்தில் அவள் மனம் விரும்பியதை வாங்கித் தருவது கணவனின் இயல்பு. யாரோடு யாரோ என்ற நாவலில் பவித்ரன் தன் மனைவி ரூபாவுக்கு ஆசைப்பட்டதை வாங்கித்தர ஆவலாக இருக்கிறான். இதனை,

"இந்த மாதிரி டயங்களில் மனதில் ஆசைப்பட்டதைச் செய்துவிடவேண்டுமாம்.

உனக்கென்ன ஆசை...? சொல்லு வாங்கித் தருகிறேன்..

பவித்ரன் கனிவோடு வினவ .. ரூபா அவனை உற்றுப்பார்த்தாள்..

என்ன .. கரிசன மழை பொங்கி வழியுது...?

நீ வாயும் வயிறுமாய் இருக்கிறாய்..."[8] என்ற வரிகளின் மூலம் மனைவி மீது கணவன் கொண்டுள்ள அன்பினை அறியமுடிகிறது. உன் மீது ஞாபகம் என்ற நாவலில் பட்டாபி தன் மனைவியைப் பிரிந்து சென்று இன்னொரு பெண்ணுடன் வாழ்ந்துவிட்டு திரும்பி வருகிறான். இதனை, "நான் திரும்பி வந்திட்டேன் அஞ்சனா... திருந்தி வந்திட்டேன்..."[9] என்ற கூற்றின் மூலம் ஆசிரியர் கூறுகிறார்.

திருமணம் முடிந்து கணவன் வீட்டில் செம்மையாக வாழ்வு நடத்தும் தன் மகளைக் கண்ட தந்தையும் தாயும் பேசிக்கொள்வதை, "இந்தக் குட்டியப் பாத்திங்களா... அடுப்பில் உலையை வச்சிருக்கேன்.. கொஞ்சம் அரிசியைக் கழுவிப் போடுடி ஆத்தான்னு சொன்னதுக்கு என்னமா சண்டை வளத்தா.. இப்பப் பாருங்க. அப்பன் பேச்சுச் சத்தம் கேட்டதும்... ஆத்தாக்காரி சொல்லாமலே மோரைக் கரைச்சிக்கிட்டு ஓடி வர்றா"[10] என்ற கூற்றின் மூலம் ஆசிரியர் படைத்துக் காட்டியுள்ளார். இல்லறம் நடத்தும் பாங்கினை அறிந்து மகிழும் பெற்றோரின் மனநிலையைக் காட்டியுள்ளார்.

பூமிக்கு வந்த நிலவு என்ற நாவலில் கயிலைநாதனும் பாரிஜாதமும் தன் மகன் மாடியில் தூங்குவதை தவறாக நினைக்கவில்லை. ஏனெனில் உறவுக்காரப் பெண் மேல் மாடியில் தூங்குகிறாள். அவளைத் தேடிப்போகவில்லை. அசதியில்தான் போய்த் தூங்கியிருப்பான் என்று கணவனும் மனைவியும் பேசிக்கொள்கின்றனர். இதனை, "எதுவும் தப்பா நடக்கலைடி .. தசரதன் தெரியாமத்தான் மாடி ரூமுக்கு போயிருக்கான். ஜாமத்துக்கு மேலே ஆகிருச்சு... அசதியில படுத்தவுடன் அப்படியே தூங்கியிருப்பான்."[11] என்ற கூற்றின் மூலம் அறியலாம்.

நிழலோடு நிழலாக என்ற நாவலில் வரும் காமேஷ் என்பவரும் அவரது மனைவியும் அவரது நண்பர் பாண்டியன் திருமணத்திற்குச் செல்கின்றனர். பாண்டியன் திருமணம் செய்துகொள்ளும் பெண் அழகாக இருக்கிறாள் என்று இருவரும் பேசிக்கொள்கின்றனர். இதனை, "பெண் ரொம்ப அழகு இப்போத் தெரியுது. ஊங்க சிநேகிதர் ஏன் இந்தப் பெண்தான் வேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்றார் என்பது?"[12] என்று மணப்பெண்ணின் அழகு பற்றி தன் கணவரிடம் மனைவி மனம் விட்டுப் பேசுவதாகப் படைத்துக்காட்டியுள்ளார் ஆசிரியர்.

மேலும் இந்நாவலில் பாண்டியனின் மாமனாரும் மாமியாரும் பாண்டியனைப் பற்றிப்



Scanned by TapScanner

பேசிக் கொள்கின்றனர். திருமணம் முடிந்தவுடன் வேலை நிமித்தமாக மருமகன் மகளை விட்டுப் பிரிந்து செல்வதை நினைத்து வருந்துகின்றனர். இதனை," என்னங்க? என்ன ஆச்சு? மாப்பிள்ளை எங்கே போகிறார்" என்று கேட்டாள். " மாப்பிள்ளைக்கு அவர் வேலை பார்க்கிற கேம்பிலிருந்து உடனே வரச்சொல்லி உத்திரவு வந்திருக்கு கற்பகம்"[13] என்று கணவனும் மனைவியும் பேசிக் கொள்வதை ஆசிரியர் படைத்துள்ளார்.

மனைவியிடம் தொலைபேசியில் பேசவேண்டுமென்று மகன் கேட்கிறான். அப்போது அந்தத் தாய் மருமகள் வெளியே போயிருக்கிறாள் என்று பொய்யாகச் சொல்கிறாள். ஆனால் மருமகளை அவள் பெற்றொர் வீட்டுக்கு அனுப்பிவிட்டனர். இதனை மறைத்துப் பேசுகிறாள். பரவாயில்லை சமாளித்துவிட்டாய் என்று மனைவியிடம் பேசுகிறார். "ஆனால் ஏன் சாருலதா நம்ம வீட்டிலிருக்கிறதா சொன்னாய்? என்று மனைவியைக் கேட்டார்"[14] என்ற கூற்றின் மூலம் அறியலாம்.

பூமிக்கு வந்த நிலவு என்ற நாவலில் தசரதன் தன் மனைவி வெண்ணிலாவைத் தான் பணியாற்றும் இடத்திற்கே வந்து தங்கிக் கொள்ள அழைக்கிறான். இதனை, "நீ எனக்கு சீதைதான்.. நானும் பெயரிலதான் தசரதன்.. மனசில ராமன்.. அந்த தசரதனக்குத்தான் ஆயிரக்கணக்கில் பொண்டாட்டிக இருந்தாங்களாம்.. இந்த தசரதனுக்கு வாழ்க்கையில் பொண்டாட்டிங்கிறது ஒருத்திதான்"[15] என்று கணவன் மனைவியின் பெருமை பற்றிப் பேசுவதைக் காணமுடிகிறது.

தஞ்சமென வந்தவளே என்ற நாவலில் பிரதாபனுக்கு ஊர்மிளாவைத் திருமணம் செய்வதாக இருந்தது. அத்தகைய நிலையில் பிரதாபனின் முறைப்பெண் சாரதாவைத் திருமணம் செய்துகொள்ள முடிவெடுத்தனர். இதனை, "ஒரே நொடியில் சிக்கலைத் தீர்த்து வைத்து விட்ட மனைவியின் மீது அவருக்குக் காதல் பெருகியது"[16] என்று ஆசிரியர் படைத்துக் காட்டியுள்ளார்.

நிழலோடு நிழலாக என்ற நாவலில் சாருலதாவும் பாண்டியனும் திருமணம் செய்து வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் பாண்டியன் தனிக்குடித்தனம் செல்லலாம் என்று தன் மனைவியை அழைக்கிறான். ஆதற்கு அவள் ஒத்துக் கொள்ளவில்லை. சேர்ந்து வாழ்ந்துதான் பழக்கம். குடும்பத்தைப் பிரிந்து தனிக்குடித்தனம் செல்ல வேண்டாம் என்று சாருலதா கூறுவதை, "என்ன வார்த்தை சொல்றீங்க? தனிக்குடித்தனம் போவதா? நாமா? எனக்கு எல்லோர் கூடவும் சொந்தம் கொண்டாடி ஒத்துமையா இருந்துதாங்க பழக்கம். குடும்பத்தை பிரிக்கிற பழக்கமெல்லாம் எனக்கு சுட்டுப் போட்டாலும் வராது."[17] என்ற வரிகளில் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

மோகத்தைக் கொன்றுவிடு என்ற நாவலில் கருணாகரன் சொத்துக்காக ஆசைப்பட்டுத்தான் சசிரேகாவைத் திருமணம் செய்துகொண்டான் என்று சசிரேகா தவறாக நினைத்துக் கொள்கிறாள். ஆதலால் கரணாகரனைப் பிடிக்கவில்லை. இதனை, "பயத்தில நடுங்கிச் செத்தாலும் சாவ ... ஆனா பால்கனிக் கதவைத் திறந்து ரூமுக்குள்ள வரமாட்ட அப்படித்தான...? ஏண்டி...? உள்ள இரக்கிறவன் உன் புருசன்தானே... உன்னைத் தொட்டவனும் உன் புருசன்தானே.. புருசன்கிட்டயிருந்து தப்பிக்க நினைக்கிற பெண்டாட்டி இந்த உலகத்திலேயே நீ ஒருத்திதாண்டி ..."[18] என்று இருவரும் பேசிக் கொள்வதை ஆசிரியர் படைத்துக் காட்டியுள்ளார்.

சொத்துக்காகத்தான் திருமணம் செய்துகொண்டானே தவிர மனம் ஒன்றி திரமணம் செய்துகொள்ளவில்லை என்று சசிரேகா கரணாகரனிடம் பேசுகிறாள். இதனை, "ஒரு பெண்ணை கல்யாணம் பண்ணிக்க அவளின் சம்மதத்தைக் கேட்கனும். அவளும் மனஷிதான் அவளுக்கும் மனமிருக்கும்ங்ற நினைப்பிருந்திருக்கணும்... உங்ககிட்ட அது சுத்தமா இல்லையே.. என்னைக் கல்யாணம் பண்ணிக்க என் சம்மதம் எதுக்குன்னு நீங்க நினைச்சிட்டீங்க.. இவளோட பெரியப்பாவுக்கு இவ அடிமைதானே... அந்தப் பெரியப்பாவுக்கு



Scanned by TapScanner

சொத்துத் தரேன்னு சொல்லிட்டா இவ கழுத்தைப்பிடிச்சு நம்ம காலடியில தள்ளிருவாருன்னு கணக்குப் போட்டு காய் நகர்த்தி ஜெயிச்சுட்டீங்க...”[19] என்ற கூற்றின் மூலம் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

## முடிவுரை

இக்கட்டுரையில் கணவன் மனைவி உறவில் இருவரிடையே முதலில் மனக்கசப்பு ஏற்பட்டாலும் பின்பு ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு நல்ல முறையில் தங்கள் வாழ்வினை வளப்படுத்திக் கொள்பவர்களாகவும் படைப்பாளர் படைத்துக் காட்டியுள்ளார்.

## சான்றெண் விளக்கம்

1. அ.குணசேகரன், தமிழ் நாவல்களில் குடும்பச்சிதைவுகள் ப.18, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-6
2. தமிழியல் ஆய்வு, முருகுரத்தினம் ப.13, ஞாலத்தமிழ் பண்பாட்டு ஆய்வு மன்றம், பல்கலைநகர் மதுரை. பதிப்பு 1994
3. அ.குணசேகரன் தமிழ் நாவல்களில் குடும்பச் சிதைவுகள் ப.12, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-6
4. தமிழியல் ஆய்வு, முருகுரத்தினம் ப.13, ஞாலத்தமிழ் பண்பாட்டு ஆய்வு மன்றம், பல்கலைநகர் மதுரை. பதிப்பு 1994
5. சு.வேங்கடராமன் சிறுகதைக் கலைஞர் ஜெயகாந்தன், ப.50, ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை முதல் பதிப்பு-2002
6. முத்துலட்சுமி ராகவன் , மழைச்சாரலாய் மனம் நனைத்தாய், ப.181, லட்சுமி பாலாஜி பதிப்பகம், முதற்பதிப்பு 2013
7. முத்துலட்சுமி ராகவன், அந்திவானம், ப.233, லட்சுமி பாலாஜி பதிப்பகம், முதற்பதிப்பு 2015
8. முத்துலட்சுமி ராகவன், யாரோடு யாரோ, ப.10, லட்சுமி பாலாஜி பதிப்பகம், இரண்டாம் பதிப்பு 2016
9. முத்துலட்சுமி ராகவன், உன்மீது ஞாபகம், ப.309, லட்சுமி பாலாஜி பதிப்பகம், முதற்பதிப்பு 2014
10. முத்துலட்சுமி ராகவன், காலை நேரக்காற்று, ப.30 லட்சுமி பாலாஜி பதிப்பகம், முதற்பதிப்பு 2013
11. முத்துலட்சுமி ராகவன், பூமிக்கு வந்த நிலவு, ப.791, லட்சுமி பாலாஜி பதிப்பகம், முதற்பதிப்பு 2013
12. முத்துலட்சுமி ராகவன், நிழலோடு நிழலாக ப.56, லட்சுமி பாலாஜி பதிப்பகம், முதற்பதிப்பு 2018
13. முத்துலட்சுமி ராகவன், நிழலோடு நிழலாக ப.67, லட்சுமி பாலாஜி பதிப்பகம், முதற்பதிப்பு 2018
14. முத்துலட்சுமி ராகவன், நிழலோடு நிழலாக ப.88, லட்சுமி பாலாஜி பதிப்பகம், முதற்பதிப்பு 2018
15. முத்துலட்சுமி ராகவன், நிழலோடு நிழலாக ப.234, லட்சுமி பாலாஜி பதிப்பகம், முதற்பதிப்பு 2018
16. முத்துலட்சுமி ராகவன், தஞ்சமென வந்தவளே ப.259, லட்சுமி பாலாஜி பதிப்பகம், முதற்பதிப்பு 2014
17. முத்துலட்சுமி ராகவன், நிழலோடு நிழலாக ப.212, லட்சுமி பாலாஜி பதிப்பகம், முதற்பதிப்பு 2018
18. முத்துலட்சுமி ராகவன், மோகத்தைக் கொன்றுவிடு ப.252, லட்சுமி பாலாஜி பதிப்பகம், முதற்பதிப்பு 2016
19. முத்துலட்சுமி ராகவன், மோகத்தைக் கொன்றுவிடு ப.262, லட்சுமி பாலாஜி பதிப்பகம், முதற்பதிப்பு 2016

௸



Scanned by TapScanner